உ

தமிழ்த்தாய் வாழ்க

# மூன்றாவது சென்னை மாகாணத் தமிழர் மாநாடு

வரவேற்புக் கழகத் தலைவர்

செந்தமிழ்ப் புரவலர், இராவ்சாகிப்

**த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, B. A., B. L.**

அவர்கள் நிகழ்த்திய

## வரவேற்புப் பேருரை

**26–12–37**

திருச்சிராப்பள்ளி

தஞ்சைக்

கூட்டுறவுப் பதிப்பகம்,

கரந்தை.

தமிழ்த்தாய் வாழ்க.

# மூன்றாவது சென்னைமாகாணத் தமிழர் மாநாடு

## வரவேற்புத் தலைவரின் முன்னுரை

தமிழன்பர்களே,

உங்கள் வருகை நல்வரவாகுக. நுண்மாண் நுழை புலனும், ஆண்மையும், பெருந்திறலும் வாய்ந்த திரு. S. சோம சுந்தர பாரதியார் அவர்களே! வெல்கநின் கொற்றம்! சிறக்க நின் ஆயுள்! 'தமிழ்ப் பெண்மணிகள் கற்பின்திறனை அறியாதார்; வடவாரியரே அதனை அவர்க்குக் கற்பித்தவர்' எனுங் கருத்துப்பட ஒரு ஐயங்கார் எழுதி வெளியிட்டிருந்த தமிழ்நூல் தவறுபட்டது என்ற உண்மையை நாடறியச்செய்து தமிழ் மக்களின் மானத்தை முன்னொருகால் காத்தனை! இதுபோது முதன் மந்திரியாராக வாய்த்திருக்கும் ஆச்சாரியார் அவர்கள் இந்திமொழியைத் தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக்குந் திட்டத்தைத் தொடங்குவே மென்பதற்குள் அதனால் விளைய விருக்கும் தீமைகளை நன்கு விளக்கி, நாடெங்கும் பரந்து, பரந்து சென்று, வீரமுழக்கம் செய்து போர்முனையின் முன்னணியில் வெற்றியுடன் முனைந்து நிற்கின்றனை! உத்தியோக வேட்கையால் விழுங்கப்பட்டு அரசியலாரின் அதிகாரப் பதவிகளில் அமர்ந்திருக்கும் தலைவர்களைப் போலாது என்றும் நிலை திரியாது கொள்கையில் உறைத்து நின்று, ஊதியங் கருதாது தமிழ்ப்பணி ஆற்றிவரும் உத்தமத் தலைவரே! தமிழ் நாட்டின் பல பகுதிகளினின்றும் தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களாய், தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பவர்களாய், இந்திப் படை எடுப்பினால் தமிழ்மொழிக்கும், தமிழர் நாகரிகத்திற்கும், தமிழ்மக்கட்கும் விளைய இருக்கும் கேடுகளைத் தவிர்ப்பவர்களாய்,

உடுக்கை யிழந்தவர் கைபோல எங்கள் இடுக்கண் களையும் பெருநோக்குடன் ஈண்டுக் குழுமியிருக்கும் தமிழன்பர்களே! உங்கள் பொன்னடிகட்கு எனது வணக்கம் உரியதாகுக.

தமிழ்நாட்டின் தலைவர்கள், செல்வத்தாலும் செல்வாக்காலும் உயர்நிலையில் இருப்பவர்கள், குறுநில மன்னர்கள், நிலக்கிழவர்கள் ஆதிய பெரியோர்கள் பேரவையில் நின்று தமிழ்ச் செல்வர்களாகிய உங்களை வரவேற்று, தமது பெருவளத்தால் வசதிகள் அளித்து, ஆவனசெய்யும் கடப்பாடுடையார். அவர்கள் பகலவன் முன்னர் ஒளிமழுங்கி நிற்கும் வெண்மதிபோல செயலற்று மறைந்திருக்கின்றனர். எளியேனாகிய யான் செயற்பாலது யாது? வரவேற்புக் கழகத்தினர் அமைத்திருக்கும் வசதிகளில் நேர்ந்துள்ள குறைபாடுகளை உங்கள் நிறைகுணத்தால் போற்றுமாறு விண்ணப்பிக்கின்றேன்.

சரிதகாலத்திற்கும் மிகமிக முற்பட்ட காலந்தொட்டு தமிழ் மக்கள் தலை சிறந்த நாகரிகமும் கொற்றமும் வெற்றியுமுடையராய் தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் குடிமக்கள். தமிழர் நாகரிகர் என்றால் தமிழர் அருளும் இரக்கமும் உடையவர்கள் என்பதே பொருள். யவனர், அசீரியர், மூர்க்காரர், ஆரியர் ஆதிய அயலவர், எவர் வரினும் எரிவில்லாது அவர்களை வரவேற்று உண்டி, உறையுள் முதலியன தந்து நட்புரிமையுடன் போற்றும் பெற்றியினர். தமிழ் மக்களின் கொடைமடம், படைமடம் பற்றிய செய்திகள் புறநானூறு முதலிய நூல்களில் பரக்கக்காணலாம். தமிழ்நாட்டின் எல்லையிலே குடியேறிய ஒருசாரர், தமிழ்மக்களிடம் பொருளும் பூசனையும் பெற்று வாழ்பவராயிருந்தும், தாங்கள் பூமியில்வதியும் தேவர்களெனக் கருதி தாமே உயர்ந்த இனத்தவரென்றும், ஏனோரெல்லாம் இழிந்தோர் என்றும் கொள்கைபற்றி இருந்து வருகின்றனர். இவர்கள் சுய நலக் கருத்தே உடையவர். தம்மினத்தவரே உண்ணவும், தம்மவரே நூல் பயிலவும், அறநிலையங்களைப் பிறர் பொருளால் தமக்கே அமைத்துக்கொள்ளவும் வழிகளைத் தேடிக் கொள்பவர். தீண்டாமை என்னும் கருத்துக்கு உறைவிடமாயுள்ளவர். கோயில், குளம், வீதி முதலிய பொதுவிடங்களிலெல்லாம் தமக்கெனத் தனியிடம் வைத்துக் கொள்பவர். ஒரு

குலத்திற்கொரு நீதி மனு முதலிய மிருதிகளில் வகுத்துக் கொண்டவர். இத்தகையினர் நம்மிடையே வதிந்து தமிழ் மக்களின் வளமனைத்தையும் தம்மதாக்கிக் கொண்டாலும், நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாது, உடனிருந்தும் தனித்த பிரிவினராய், இருந்து வருவது கண்கூடு. அவர்கள் அதிவருணாசிரமியாகிய துறவி ஆகலாம், மத மாற்றத்தால் கிறித்தவர் முதலியோராகலாம், சீர்திருத்தக்காரராகலாம், கதராணியலாம், கொழுத்த தேசிய வாதியாகலாம்! அவர்கள் குருதியில் உறைந்தோடும் சுயநலத்தை விடுவதோ அரிது. தமிழ் மக்களோவெனின் தன்னலமே அறியாதவர்—பிறர் நலத்தையே தன்னலமாப் பேணுபவர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் உறுதியைப் பலநூறு ஆண்டுகட்கு முன்னரே கூறியவர். யான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் எனுங்கொள்கையினர். இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தோர் எனும் இரண்டு சாதியல்லது பிறிதொரு சாதி அறியாதவர். "சிவனெனு மொழியைக் கொடியசண்டாளன் செப்பிடி னவனுடனுறைக, அவனொடு கலந்துபேசுக அவனோடிருந்துண்ணுக," எனுங் கொள்கையில் உறைத்தவர். திருக்குறள் போன்ற அறநூலுக்குரியவர். ஊன்பயில் வேள்விகளை மறுத்தவர். இத்தகைய சீரிய கொள்கைகள் யாவையும் ஆரிய மக்களின் நீடிய தொடர்பால் யாம் மறந்துவருகின்றோம். சாதியைச் சமய மாக்கியும், சமயத்தைச் சாதி ஆக்கியும், பெண் மக்களின் உரிமைகளைக் கவர்ந்தும், சாதிப் பெயரால் மக்களை இழிவு படுத்தும், எண்ணிறந்த பிளவுகளையும், உண்டுபண்ணி அவற்றால் யாங்கள் அல்லற்பட, அவர்கள் இறுமாந்திருக்கின்றனர். இற்றைநாளில் மக்கள் சற்று அறிவு விளக்கம் பெற்று சமயக்கட்டுகளை ஆய்ந்து உண்மைகாண முற்படுவதை அறிந்து, சமயத்துறையில் பணிசெய்வார் ஒரு பகுதியும், அரசியற்றுறையில் பணிசெய்வார் ஒரு பகுதியும் ஆக அணிவகுத்துக்கொண்டு தாம் ஆளவும், நம்மை அடிப்படுத்தவும், முனைந்து நிற்கின்றனர். இவர்கள் சார்ந்திருக்கும் அரசியற் கட்சியில் தமிழ் மக்கள் மிகுதொகையினரா யிருந்தும், மதிநுட்பமும், தன்னம்பிக்கையும் இல்லாத காரணத்தால் பார்ப்பனர் தலைமையிலிருக்கவும்,

நம்மவர் அடிமை செய்யவும் நேர்ந்துவிட்டது. இந்நிலை ஏற்பட்டு நூற்றைம்பது நாட்கள் கூட ஆகவில்லை. இதற்குள்ளாக ஏற்பட்டிருக்கும் குழப்பங்களையும், ஆட்சிமுறையையும் பார்க்க நெஞ்சம் நடுங்குகின்றது. விடுதலையையும், குடியாட்சியையும் விழைந்தநாடு அவற்றை முற்றுமே யிழந்து ஒரு மனிதனுடைய எதேச்சை அதிகாரத்தில் அகப்பட்டு அலங்கோலப் படுகிறது. இத்தகைய ஆட்சிமுறையால் நிகழவிருக்கும் தீங்குகளை அறிந்து, நமது பிறப்புரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுதற்கான வழிதுறைகளைத் தேடுதற்கெனவே யாம் கூடியிருக்கின்றோம்.

அரசியல் ஆட்சியைத் தமது இணையற்ற வெற்றியால் கைக்கொண்ட தலைவர்கள், செய்வன, தவிர்வன யாவையெனத் தெரியாது, அரசியலைக் கைக்கொண்டால் தாம் செய்வேமெனக் கூறிய உறுதிகளை அறவே மறந்து, மக்களுள் எப்பகுதியினரும் வேண்டாத கருமத்தை வன்கண்மையால் நிறுவ முற்படுவது குடியாட்சி முறைக்கும், தாம் மேற்கொண்டொழுகுவதாகக்கூறி வரும் மக்கள் ஊழியத்திற்கும் முற்றும் முரண்பட்டதாகும். அயன்மொழியாகிய இந்தியை, தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளின் 1, 2, 3 பாரங்களில் கட்டாய பாடமாக்கத் துணிந்தது கொடுங் கோன்மையாகும். இத்தீய செயலால் தமிழ்நாடு எவ்வித நலனும் அடைவதற்கில்லை என்பது சரதம். மக்களின் கல்வி முன்னேற்றமும், அதனை அடிப்பட்ட பிற நலன்களும் பாழ்பட்டொழியும். வடவாரியரின் தன்னலக் கொள்கைகளாகிய இருப்பு விலங்கில் தமிழ் மக்கள் பிணிக்கப்பெற்று மீளா அடிமைகளாக்கப் பெறுவர். இத்தகைய தீமைகளை விளைக்கும் இந்திப் படை எடுப்பின் வரலாற்றினைத் தமிழ் மக்கள் நன்கு ஆராய வேண்டும். இந்திமொழியானது தமிழ்நாட்டில் செலாவணியற்றது; ஒருவரும், ஒருபோதும் வேண்டாதது. இந்திமொழியைத் தமிழ் நாட்டில் ஆட்சியில் கொணருவேன் என வடநாட்டினரிடம் தான் கூறிய காரணத்தால் இந்தத் திட்டத்தை வகுத்தேன் என முதன் மந்திரியார் சொல்லுகிறார். இது அரசியல் முறையா? தக்கதொரு காரணமா?

குடிமக்கள் தேர்ந்துகொள்ளும் தலைவர்கள், மக்களூழியர்களாய் மக்களின் தேவைகளை அறிந்து, அவற்றை முடித்துத் தருவது குடியாட்சியின் சிறந்த பண்பாகும். இதற்கு முற்றும் மாறாக, மக்களுக்குத் தேவையில்லாததும், மக்கள் ஒருபோதும் வேண்டாததும், அரசியற் றலைமையைப் பெற்ற பின்னர் தானே விரும்புவதும் ஆகிய இந்திமொழிப் பயிற்சியை இளஞ் சிறார்கள் மூன்றாண்டுகள் படித்தே தீரவேண்டுமெனக் கட்டாயப்படுத்துவது குடியாட்சியா? நாடெங்கும் தமிழ் மக்கள் தமிழ்ச் சங்கங்களின் வாயிலாகவும், பொதுக் கூட்டங்களின் வாயிலாகவும் இந்திமொழிப் பயிற்சியைக் கண்டனஞ்செய்து அனுப்பிவரும் முடிபுகளைக் கருதமாட்டேன்; குப்பைத் தொட்டியில் எறிவேனென்பது என்ன செருக்கு? கல்வித் துறையிலும், உலகியல்நிலையிலும் உயர்பதவியிலிருக்கும் பெருந் தலைவர்களாகிய திருவாளர்கள் C. R. ரெட்டி, Sir. K.V. ரெட்டி, Sir. M. கிருஷ்ணன் நாயர், T. R. வேங்கடராம சாத்திரியார் முதலிய பெரியோர்களும், தமிழ்ப் புலமை சான்ற மூதறிஞர்களும், நிறைமதியுள்ள பிறரும் இந்திமொழியின் கட்டாயப் படிப்பைத் தக்க ஏதுக்களால் மறுக்க, இவற்றைச் செவியில் ஏற்காது தன்னுடன் மாறுபடுவோர் அனைவரும் **அறிவிலிகள்** எனக்கூறுவது என்ன மதியுடைமை? ஓட்டுரிமை பெற்ற மக்களிற் பெரும்பாலார் கல்வி இல்லாதவர், எழுத்தறியாதவர், வறுமையில் ஆழ்ந்தவர்; நலந் தீங்குகளைத் தாமே ஆய்ந்து தெளிவதற்கான நன்மதியில்லாதவர். வறுமையை ஒழிப்பேம், வரியைக் குறைப்பேமென ஆசைகூறியும், காந்தி அடிகள், வந்தேமாதரம் என்ற மந்திர மொழிகளால் அவர்களை மயக்கியும், யாங்கள் நியமித்த அபேட்சகர் (Candidate) கழுதையாயிருக்கலாம், கம்பமாயிருக்கலாம், நீங்கள் கொடுக்கும் வாக்கு (Vote) காங்கிரசுக்கே, என்றெல்லாம் பறைசாற்றி கல்லா மக்களின் உரிமைகளைப் பறிகொண்டு தேர்தலில் வெற்றியடைந்தனர். ஆராயாது தேரப்பட்ட அங்கத்தினர்கள் **இப்பேற்றி யினாலேயே** அமைந்து, ஒருவேலையும் செய்யாதிருக்க ரூபா 75 மாதக்கூலியும் பெருவாழ்வும் பெற்றுவிட்டனர். சட்டசபையில் மௌனிகளாய் இருந்து மந்திரிகளின் செயல்களை ஆராயாது

ஆதரிக்க வேண்டியது இவர்கள் செய்கடன். இதுதானுகுடி அரசு? முதன் மந்திரியார் ஒருவரே எண்ணி விதிக்கும் கட்டளைகள் எத்தகையனவாய் இருந்தாலும் அவற்றை ஆதரிப்பதே கருமமெனை அடிமைவாழ்வில் அடிப்பட்டு நிற்கும் ஆட்சி முறையில் விளையும் தீமைகளை அளவிடவுங் கூடுமா? அயல் நாட்டவரின் ஆளுகையிலிருந்து இந்தியமக்களை விடுவித்து, வாக்குரிமை, செயலுரிமைகளைத் தருவோமென உறுதிகூறி ஆட்சியைக் கைக்கொண்டவுடன், ஒரு மனிதனுடைய முறை திறம்பிய ஆளுகைக்கு அடிமை ஆக்குவது விடுதலையாகுமா? ஆங்கிலேயர்கூட இம்முறையைக் கையாண்டதில்லையே? தமிழ் மக்களாவார் இனியும் உறங்காது, மந்திரிவகையினரின் செயல்களால் விளையும் நலந் தீங்குகளை ஆராயவும், அடிமை மனப்பான்மையை அகற்றித் தாமே ஆராய்ந்து காணும் முடிபுகளைத் துணிவுடன் கூறவும் தலைப்பட்டு, மந்திரிவகையினரின் தளைகளை அவிழ்த்து, அடிமைவாழ்வை ஒழித்து, உயிரினுஞ்சிறந்த உரிமைகளைக் காத்துக்கொள்ள முற்படவேண்டும்.

இந்திமொழி கட்டாய பாடமாக்கப்படும் என்ற முடிபினுல் ஒரு நன்மை விளைந்திருப்பது கண்கூடு. உறங்கிக்கிடந்த தமிழ் மக்களை விழிக்கச் செய்தது. நாடெங்கும் மிகுந்த பரபரப்பையும் கிளர்ச்சியையும் விளைத்தது. ஊர்தோறும் எண்ணிறந்த பொதுக் கூட்டங்கள் கூடி பல்லாயிரக்கணக்கான கண்டனத் தீர்மானங்களை அனுப்பச் செய்தது. தமிழ்ப் பாதுகாப்புக்கென ஆங்காங்கு சங்கங்கள் நிறுவப்பெறுகின்றன. சாதி, சமயப் பிணக்கங்களாலும், அரசியற் கொள்கைகளாலும் பிளவுபட்ட தமிழ்மக்கள் இந்திமொழிச் சூழ்ச்சியால் நிகழவிருக்கும் கேடுகளைத் தடுத்து, தமிழ் மக்களின் உரிமைகளையும், தமிழரின் நாகரிகத்தையும், தமிழ்மொழியின் தனிச்சிறப்பையும் பேணி வளர்க்க ஒரு முகமாய் அரண்வகுத்து நிற்கின்றனர். மொழிச் செல்வமும், மொழிமதுகையும் செழித்து வளரும் மக்கட் பகுதியினரே கொற்றத்துடன் உலகெங்கும் வாழ்கின்றனர். மொழி மதுகையில்லாத மக்களினத்தவர் மிகமிகக் கீழ்நிலையில் தாழ்ந்து கிடக்கின்றனர்.

நமது நாட்டில் கல்வியறிவில்லாத மக்கள் நூற்றிற்குத் தொண்ணூறினும் மேற்பட்டிருக்கின்றனர். இவர்கள் யாவரும் கல்வியறிவுடையராலன்றி குடியாட்சி செம்மையுறாது என்றும், அனைவரையும் கண்ணுங் கருத்தும் உடையாராக்குதல் அரசியலார் இன்னே தொடங்கவேண்டிய கருமம் என்றும், பேரறிஞர்கள் ஒப்புகின்றனர். கல்லா மாந்தர் அனைவருக்கும் கட்டாயக் கல்வியை வழங்குதல் அரசியலாரின் முதன்மையான கடமையாயிருப்பதை அறிந்துவைத்தும் அதனைத் தொடங்காததன் பொருட்டு என்னை? மதுவிலக்கைத் தொடங்கிக் கைப்பொருளையும் இழந்திருக்கின்றோம் பாடசாலைகள் ஏற்படுத்தவோ, கட்டாயக் கல்வி வழங்கவோ வகையில்லை என்பது என்ன மதி? மக்களை அறிவுடையராக்கிக் கொள்ள வேண்டிய முதற்கருமத்தைச் செய்யத் தவிர்ந்திருப்பதன் கருத்து, அறியா மக்களை ஆட்டுமந்தைபோல் வெருட்டிச் சென்று நயவஞ்சக மொழிகளால் ஏமாற்றி மஞ்சட் பெட்டியில் வாக்குகளைப் போடச்செய்வது எளிதெனக்கருதியா? இன்றியமையாது செய்ய வேண்டிய கருமத்தைச் செய்யாதொழிந்த தவறோடு நில்லாது செய்யவொண்ணாத தீச்செயலாகிய இந்திவளர்ப்பை மேற்கொண்டது மலையினும் பெரியதவறு. உயர்தரத் தொடக்கக் கல்லூரிகளில் தமிழ் வித்துவான்கள் மிக மிக அவசியமாய் வேண்டப் பட்டும் கூடாதென ஒதுக்கப் படுகின்றனர். உயர்தரப்பள்ளிகளில் இரண்டிற்குங் குறையாத புலவர்கட்கு வேலையிருந்தும் அவர்கட்கு இடந்தராது பள்ளிஇறுதி, நடுத்தரத் தேர்வு, B. A. முதலிய தேர்வு பெற்றவர்களைக் கொண்டு வித்துவான்களுக்குரிய இடங்களை நிரப்பிக் கொள்ளுகின்றனர். கல்லூரிப்பாடசாலை, உயர்தரப்பள்ளி, ஆகிய எல்லாப் பாடசாலைகளிலும் தமிழ்ப் புலவர்கட்கு, மற்ற ஆசிரியர்களுடன் ஒத்த மதிப்பும் உரிமையும் வழங்கப் படுவதில்லை. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் வடமொழியாளர் தமிழ் மொழிக்கும் உண்மைத் தமிழ்ப்புலவர்கட்கும் இழைத்து வரும் கேடுகள் கணக்கிறந்தன. இஃது இவ்வாறிருப்பதை அறிந்தும் இக்குறைபாடுகளை அகற்றமுற்படாது, இந்தியை

வளர்க்கவும், இந்தி ஆசிரியர்களை நியமித்துப் பேணவும் தலைப் பட்டு, இலட்சக்கணக்கான பணங்களை இத்துறையில் செலவிடத் துணிவது மதியீனமல்லவா ? இதனைச் சிந்திக்கும்போது 'எதிலார் ஆரத்தமர்பசிப்பார் பேதை, பெருஞ்செல்வ முற்றக் கடை'' என்ற முதுமொழி நினைவிற்கு வருகின்றது.

இந்திமொழி கட்டாய பாடமாக்குவதன் காரணம் மனதிற்குத் தோன்றியவாறெல்லாம் பேசப்பட்டு வருகின்றது. அவை பொருளற்ற வெற்றுரைகளெனத் தலைவராகிய மூதறிஞர்களால் தக்க ஏதுக்களுடன் மறுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியப்போதுமொழி யொன்று வேண்டுமென்பது மந்திரிமார் கூறி வரும் காரணங்களுள் ஒன்று: ஒவ்வொரு மொழியினரும், தத்தம் தாய்மொழியிலே தமது கருத்தைவிளக்கும் உரிமையானது மறுக்கப்படலாகாது என்பதே எமது முடிந்த கொள்கை. பொதுமொழி வேண்டுமென வைத்துக்கொண்டாலும், பொது மொழியாதற்குரிய சிறப்புடைய மொழி யாது? அரசியலாரின் பேரவைகளிலும், ஆட்சிக் கழகங்களிலும் வாதத்திற்கு வரும் பொருள்கள், அரசியல், பொருளியல், அறநெறி, ஆதிய அறிவு நூல்பற்றிய செய்திகளாகும். அவைபற்றிய வாதங்களை இடர்ப்பாடின்றி நிகழ்த்துதற்கு சொற்செல்வமும், கலைநூல் வழக்கும் இல்லாத இந்திமொழி ஏற்ற கருவியே அல்ல. அரசியற்கட்சிகளின் தலைமையில் இருக்கும் மூதறிஞர்கட்குத் தேசீய உணர்ச்சியையும், நல்லறிவையும் வளர்த்த ஆங்கில மொழி சொற்செல்வம் நிரம்பிய இந்தியப் பொதுமொழியாய் இருந்து வருகின்றதே ! அதனையே பயில்வதால் விளையுங் கேடுதான் என்னையோ ? 'Government of India Act' எனும் இந்திய அரசியல் சட்டம் மாற்றப்பட்டாலன்றி ஆங்கிலமொழி தானே அரசியல் மொழியாய் இருக்கப் போகின்றது? ஆங்கில மொழியின் இன்றியமையாமையை உணர்ந்து தானே அதுவும் கட்டாய பாடமாக இருந்து தீரவேண்டுமென மந்திரி வகையினரும் உடன்பட்டிருக்கின்றனர். இந்தியப் பொது மொழியாயும் உலகப் பொது மொழியாகவும் இருந்து நம்மவர்க்கு நல்லறிவை நல்கிவரும் ஆங்கிலமிருக்க, அதனை

டமையாது எவராலும் வேண்டப்படாத இந்தி மொழியை வலிந்து நுழைப்பது பயனில் உழவாகும். பருவம் நிரம்பாத சிறுவர்கள் ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு அயன் மொழிகளைப் பயிலுவது முடியாத கருமமாகும். தமிழ்மொழி, ஆங்கிலமொழி, அறிவுநூல் ஆகிய பாடங்கள் மாணவர்க்கு மிகவும் பயன்படுவன. அவற்றிற்குரிய நேரங்களினின்றும் காலத்தைத் திருடி அதனை இந்திப் பயிற்சிக்கு ஒதுக்குவதால் தமிழ்மொழிப் பயிற்சிக்குரிய நேரம் குறைந்து கேடுறுவதோ டமையாது,மாணவர்களின் கல்வி முன்னேற்றமும் கெட்டுவிடும். மனிதனுடைய உடலினின்றும் பிரிக்க முடியாது ஒன்றியிருந்து அவன் உடலைக் காத்துவரும் தோலைப் போன்றது தமிழ் மொழி என்றும், அவன் விரும்பினால் அணியவும், வெறுத்தால் கழற்றி எறியவும் கூடிய செருப்பையும், சட்டையும் போன்றது இந்தி மொழி என்றும் ஒப்புக்கொள்ளும் முதன் மந்திரியார் இதனைக் கட்டாயப் படுத்துவது எதன்பொருட்டு? வடமொழி மாணவர் எழுத்தும் சொல்லும் பொதுவாயிருக்கும் இந்தியை எளிதே பயின்று கல்வியில் முன்னேறவும், கல்வித்துறையில்முன்னேற்ற மடையாதும், வடமொழிப் பயிற்சி இல்லாதும் இருக்கின்ற தமிழர்கள் இந்திச் சுமையினால் இடர்ப்பட்டு 3-வதுபாரத்துக்கு மேல் வராது நின்றுபடவும் செய்யுங் கருத்தா? வார்தா கல்வித் திருத்தத்தைப் பார்க்க இதனினும் பெருங்கேடுகள் விளையுமோ வென அஞ்சவேண்டியிருக்கின்றது. ஒன்று முதல் ஏழுவகுப்பு வரை கற்பிக்கும் தொடக்கக் கல்லூரிகளின் செலவிற்காகும் தொகைகளை ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து விவசாயமோ, கைத்தொழிலோ செய்து தேடிக்கொள்ளவேண்டுமாம்! இது விந்தையினும் விந்தையாக இருக்கின்றது! மாணவர் படிக்க நேரமா? தொழில் செய்து உழைக்க நேரமா? பத்துப் பன்னிரண்டு வயதுப் பிள்ளைகள் செய்வினையும், கைத்திறனும் எங்ஙனம் பெறுதல் கூடும்? தொழில் செய்வதற்கான இடமும் பொருளும் பெறுவது எங்ஙனம்? பெரும்பாலார் கல்வி நிரம்பாது அறிவிலிகளாய் இருக்கச்செய்வதே இதுபோது அரசியலில் தலைமை பெற்றிருக்கும் பெரியோர்களின் கருத்துப்போலும்!

உலகத்தின் முற்போக்கினையும், நாகரிக மக்களின் கலைத்திறன், பொருளாக்கம், வாணிகப் பெருக்கம் ஆகியவற்றையும், வல்லரசுகளின் மனப்பான்மையினையும், நமது வலியற்ற நிலையினையும், அறிவற்ற செயல்களையும் ஒப்புநோக்க அரசியல் ஆட்சியில் இருப்பவர் செய்யக் கருதும் கல்விநெறித் திருத்தங்கள் கல்வியைச் சீரழித்து நாட்டையும், மக்களையும் கீழ்நிலையில் கொண்டுய்க்குமெனும் அச்சத்தை விளைக்கின்றது. பொதுமக்களின் ஆதரவால் அரசியலில் தலைமைபெற்ற ஒருசிலர் எதேச்சாதிகாரம் செய்யத் தலைப்பட்டு, தம்மனம்போனவாறெல்லாம் செய்யத் துணியும் மாண்பற்ற செயல்களுக்கு அடங்கி, மக்கள் அடிமைப்படவேண்டுமென்பது குடியாட்சியின் பண்பா?

காரணம் எதுவாயினும், புதுவதான ஆட்சிமுறை சென்னை மாகாணத்தில் நிலைத்துவிட்டது. ஆட்சியின் தலைமையிலிருக்கும் முதன் மந்திரியார் வடநாட்டினரின் நன்மதிப்பைப் பெறுவதில் கருத்துடையரா யிருக்கின்றார். தன்னை உயர்நிலையில் வைத்த பொது மக்கள் செய்கின்ற முடிபுகளைப் புறக்கணித்து உதாசினமாகப் பேசுகின்றார். அவருடனிருந்து பணியாற்றத் தலைப்பட்டிருக்கும் மந்திரிகளோ முதன் மந்திரியாரின் குறிவழிநின்று குற்றேவல் செய்வதே தமது கடனெனக் கருதி இருக்கின்றனர். இம்மந்திரிக் கூட்டத்தினைத் தாங்கி நிற்கும் சட்டசபையினர் தாமேசிந்திக்கவோ, தம்மனச்சான்றிற்குத் தோன்றியகருத்தை வெளிப்படையாய்ப் பேசவோ வொண்ணாத மரப்பாவைகளாய் அமருங் கதியை அடைந்துவிட்டனர். சுய ஆட்சி தேடிய குடிமக்கள் முதன் மந்திரியாரின் அடிமைகள் ஆயினர். தமிழ் மக்களே! இந்த அடிமை வாழ்வினின்றும் விடுதலை உண்டா? விடுதலை பெறுவது எப்படி? தமிழர்களாகிய யாம் இனிச்செய்ய வேண்டுவது என்ன? என்றெல்லாம் கருதிமுடிப்பதற்கே இங்குக் குழுமியிருக்கின்றோம்.

மக்களின் முன்னேற்றத்திற்குக் கல்வியும் அறிவுமே அடிப்படை. நம்மவரிற்பெரும்பாலர், மடங்கொண்டறிவகற்றுதற்கான கல்வியைத்தொடங்கவும், வேண்டிய அளவு கல்வியைப் பயிலவும் தனித் தமிழ்க் கலாசாலைகள் நடெங்கும் நிறுவப்படவேண்டும்.

அரசியலார் செலவில் தொடக்கக்கல்லூரிகள் நிறுவவும், ஆங்கெல்லாம் தாய்மொழியில் கல்விபயிலவும் கல்லாமாக்கள் அனைவரையும் கட்டாயப் படுத்துமாறு அரசியலாரைத் தூண்ட வேண்டும். உயர்தரத் தமிழ்க் கல்வியேயன்றி; அறிவுக்கலை, கவின்கலை, மருத்துவம், சிற்பம், ஓவியமாதிய தொழிற் கலைகள் அனைத்தையும் தமிழ்மொழியில் பயிலுதற்கான பல்கலைக்கழகம் ஒன்றேனும் நிறுவி தமிழ்மக்களால் பேணிவளர்க்கப்பெற வேண்டும். தெலுங்கர், கன்னடர், மலையாளர், ஆகியபெருமக்கள் தனித்தும் ஒருங்குசேர்ந்தும் தத்தம்மொழியையும், இனத்தவரையும்வளர்த்துவரும் பெற்றிமைகளை யாம் கருதினோமில்லை. தமிழ்நாட்டின் எல்லையில் தனித்த தமிழ்மொழிக் கல்லூரி ஒன்றுதானும் காண்பதற்கில்லை. இந்திமொழியின் வளர்ச்சி தமிழர் உதவியில் வளம்பெற்று வருகின்றது. பிணமொழியெனக் (Classical)குறிக்கப்படும் வடமொழியையும், பயனற்ற இந்திமொழியையும் வளர்க்கும்பொருட்டுத் தமது செல்வங்களை வரையாது கொடுக்கும் தமிழ்மக்கள் தமது உயிரினுஞ்சிறந்த தாய்மொழியைப் போற்றாதிருப்பது ஏனோ?

தமிழ் வளர்ச்சியிலும், தமிழ்மக்களின் நலப்பாட்டிலும் கருத்துடைய அறிஞர்கள் ஊரெங்கும் கிளர்ச்சிசெய்து, தமிழ்மக்களை அறைகூவி எழுப்பி தமிழ்ச்சங்கங்கள் நிறுவியும், பெருந்தொகைகள் திரட்டியும், தனித்தமிழ்க் கல்லூரிகளும், படிப்பிடங்களும், உடற்பயிற்சிக் களரிகளும், தொழில் நிலையங்களும், தமிழ்மக்களின் அறிவு செயல் ஆக்கங்களை வளர்க்கும் வசதிகளும் அமைக்க முற்பட வேண்டும். இக்கூறியவாறு பெருநோக்கங்களுடன் பணிபுரியத் தலைப்படும் சங்கங்கள் யாவும் நடுவிடத்திலுள்ள ஒரு சங்கத்துடன் இணைத்துக்கொள்ளவும், ஆக்கவேலைகளைத் தொடங்கி நடத்த ஐந்தாண்டு திட்டம் வகுத்து, தொடர்புகொண்ட சங்கங்கள்யாவும் கோட்கோப்புக் கொண்டு அதனை நிறைவேற்றவும் வேண்டும்.

இத்தகைய நற்கருமங்கள் முட்டின்றி முடிதற்கான உதவிகளைப்புரிந்து துணைநிற்கும்படி தமிழ்நாட்டுத் தலைவர்களை நெருங்கிப் பணிகொள்ளவேண்டும். பஞ்சாயத்து, சில்லா, நகர

மாதிய கழகங்களிலும், சட்டசபைகளிலும் நம்முடைய உதவியால் பதவிகள் பெற்றிருக்கும் உறுப்பினர் தமிழ் நாட்டில் இந்திமொழிக் கட்டாய பாடமாக்கப்படாமல் தடுக்கவும், தமிழ் மொழியைக் கட்டாயபாடமாக்கவும், முனைந்துவேலைசெய்யுமாறு தூண்டவேண்டும். 1, 2, 3 பாரங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக அமைக்கும் பள்ளிக்கூடங்கட்கு மாணவர்களை அனுப்பாது நிறுத்தவேண்டும்; அப்பள்ளிக்கூடங்களில் அமர்ந்து கல்வி பயிலமாட்டோம் எனும் நல்லுணர்ச்சியையும், உறுதிப்பாட்பாட்டையும் மாணவர்கள் அடையுமாறு முறையான நெறிகளிலெல்லாம் அவர்களைத் தெருட்டுதல்வேண்டும். இவ்வாறெல்லாம் அரும்பணிகளை ஆற்றுதற்கு செவ்வியமனமும், சிறந்த குறிக்கோளும், மனவுறுதியும், தாய்மொழிப்பற்றும் ஆள்வினையுடைமையும் உடைய தொண்டர் படைகள் நாடெங்கும் பணி செய்யத் தொடங்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்மக்கள் ஒருங்குசேர்ந்து தமது அறிவையும் ஆக்கத்தையும் வளர்க்கவும், தமது உரிமைகளைக் காத்துக் கொள்ளவும் தலைப்படுதல் முடிந்த நோக்கம் என்றாலும், இவை முற்றுப் பெறாது இடைமுறிக்கும் தீயகொள்கைகளும், செயல்களும் நமதூடே பரவிநிற்கின்றன. 'ஒன்றேகுலம்; ஒருவனே தெய்வம்' என்ற தமிழ்மக்களின் சிறந்தகொள்கை இதுபோது வழக்கு வீழ்ந்திருக்கின்றது. நல்லபயிர்கள் தலையெடுக்கவொண்ணாது அவற்றினிடையே கொழுமையுடன் வளரும் களைகளையொப்ப சாதிசமயக்கொள்கைகள் வீறுடன் வளர்கின்றன. அவற்றை நமதிடை பரவச்செய்து வளர்த்து ஊதியங்கொள்ளும் ஆரியக்கொள்கையினர் இத்தீய கொள்கைகளை நிலைநிறுத்தும் கருத்தையே முக்கிய நோக்காகக் கொண்டு சமயம், சமூகம், அரசியல் ஆதிய எல்லாத்துறைகளிலும் அமயத்துக்குத் தக்க வேடங்களைப் புனைந்து, தமது நயவஞ்சகங்களால் நம்மவரை ஏமாற்றியும், பகைமைகளை மூட்டியும், நம்மைப் படுகுழியில் ஆழ்த்தி, அல்லது நம்மவரைப் பொம்மைகளாக அமர்த்தி, எல்லாத்துறைகளிலும் ஆட்சியைத் தாமேபுரிந்து வருகின்றனர். கூர்த்தமதியுடன் நாம் ஆராய்ந்து இவற்றின்

உண்மை காணவேண்டும். உடன்பிறந்தே உடலைக் கொல்லு கின்றநோய்களைப் போன்று, நம்முடனிருந்து தீங்குகள் புரிந்து வரும் இனத்தவர் துணையைநாடாமலும், அவர்கட்குத் தலைமையை நல்காமலும், விழிப்புடனிருந்து தமிழ்மக்களின் ஒற்றுமை நலங்களைப்பேணி, உரிமைகளைக் காத்து, தமிழர் அறநெறியையும், தமிழர் நாகரிகத்தையும் கடைப்பிடித்தொழுகுதல் வேண்டும். இக்கூறிய நோக்கங்கள் நிறைவேறுதற்கு, உண்மைத் தமிழர் பல்லாயிரவரின் உழைப்பும், பெரும் பொருட்செலவும் இன்றியமையாது வேண்டப்படும். சீலமும், நோன்பும் உடைய தொண்டர்களும், நன்மதியும், வினைத்திறனும் உடைய தலைவர்களும் முற்பட்டால் இவ்வெண்ணங்கள் அனைத்தும் எளிதே நிறைவேறும்.

இந்தியப் பொதுமொழி என்ற புனை பெயரால் இந்தி எனும் வடமொழி தமிழ் நிலத்தில்நுழைந்து ஆரியக்கொள்கைகளை வளர்த்து தமிழர் நாகரிகமெனும் வான்பயிரை அழிக்காது காக்கும்பொருட்டு, தமிழர்அறநெறி ஆகிய கொழு கொம்புகளில் தமிழ்மொழியாகிய வேலியிட்டு அயலவராகிய பட்டிகள் நுழையாது அரண்செய்து தமிழ் மாகாணத்தைத் தனியே பிரித்துப் பொது நலத்தையே பேணும் தமிழரசு ஆட்சி செய்தல் வேண்டும். மெய்யன்பர்களே! மாட்சிமிக்க தலைவர் அவர்களும், நன்மதியும், மன உறுதியும்கொண்ட உண்மைத் தமிழ் மக்களாகிய நீங்களும், தமிழ் நிலத்தில் விரவியிருக்கும் தீமைகளை அகற்றவும், ஒற்றுமைப் பண்பை வளர்க்கவும், நமது சமுதாய நிலையை மேன்மேலுயர்த்தவும் இன்றியமையாத சாதனம் மற்றொன்றுஉளது. அதுநாட்டின் நிகழ்ச்சிகளை உள்ளவாறு உணர்த்தும் "தினசரி" எனப்பெறும் "நாளிதழ்" ஆகும். மாண்டொழிந்த "Justice", இருப்பதா இறப்பதா என இயங்கும் "விடுதலை" போன்ற தாள்கள் மிகமிகத் தேவை. இவை நமக்கு உயிர்நாடி போன்றவை. இவற்றின் வாழ்வில் நமது வாழ்வு; இவற்றின் தாழ்வில் நமது தாழ்வு என்று உறுதியாக மனதிற் கொள்ள வேண்டும். இதுபோது தமிழ் உலகில் உலவிவரும் தாள்கள்

நாக்குக் கேடு சூழ்வன. பார்ப்பனச் சார்புடையன தமிழரின் அரிய செயல்களைப் புறம் பழிப்பன, இந்தி எதிர்ப்புகளும், மறுப்புகளும் கோடிக்கணக்கினவாய் நாடெங்கும் நிகழ்ந்துவர அவைமுற்றும் மறைக்கப் படுகின்றன. புத்தம் புதுவதாகவும், சின்னஞ்சிறு முயற்சிகளாகவும், பலதாள்கள் தோற்றுதல் நல்லமல்ல ஒன்றேனும் வளனுறப் போற்றி வளர்க்கப் பெற வேண்டும்.

தமிழர் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்ப் பணிபுரிந்து எம்மைப்புரந்தருள, ஈண்டுக் குழுமியிருக்கும் தமிழ் மக்களை மனதார வரவேற்கின்றேன். அமைதியுடனும், பொறுமையுடனுமிருந்து நமது நோக்கங்கள் நிறைவேறுதற்கு இன்றியமையாதனவாகிய தீர்மானங்களை நிறைவேற்றுமாறு வேண்டுகின்றேன். பிறர் செய்து முடிக்கக் கூடிய செயல்களைப் பற்றிய தீர்மானங்கள் மிகச் சிலவாகவும், நாமே முயன்று முடித்தற் குரியனவாகிய தீர்மானங்கள் பெரும்பாலனவாகவும் இருத்தலே நலமென்பது எனது கருத்து. மேற்கொண்டொழுகவேண்டிய வேலைத் திட்டத்தை இன்றே அமைத்து வீழ்நாள் படாமல், தன்னம்பிக்கையும், ஊக்கமும், முயற்சியுங்கொண்டு உழைப் போமாக.

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும், நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்"

நலம்! நலம்!! நலம்!!!

தமிழ்த்தாய் வாழ்க

தஞ்சை,
21—12—37.

தமிழ்த்தொண்டன்
த. வே. உமாமகேசுவரன்